"That the allotment of Rs. 14,49,60,200 under Demand No. 12-Police be reduced by Rs. 100."

5. நடைமுறைக் கேள்விகள்

ஒரு கட்சியிலிருந்து ஒரு உறுப்பினருக்கு மேல் வெட்டுத் தீர்மானம் முன்மொழிய அனுமதிக்காதது குறித்து.

THIRU K. VINAYAKAM: I want to raise a point of order. Please listen. Our rules do not prohibit the moving of more than one cut motion from one party. You may find that we are having the practice of having one cut motion for one party. Government people are not going to move cut motion. We in the Opposition move cut motion. What is the harm, Sir, if more than two cut motions are moved from the same party? If I find that there are remarkably some defects to be pointed out in the working of the department, I may be allowed to move a cut motion, besides that of my friend's viz. (Thiru T. Martin's) cut motion. It may be that due to paucity of time, I may not actually speak on the demand. But that is different. More than a cut motion from one party can be allowed under such circumstances. Our rules do not prohibit the same. I am bringing it to your notice.

If more than two people of the same party want to move cut motions and they are relevant, that may be allowed. Our rules do not prohibit it.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது இங்கு வந்திருக்கும் வெட்டுத் தீர்மானங்களில் ஒன்று ரெலவெண்ட், ஒன்று ரெலவண்ட் இல்லை என்று இல்லை. எல்லாமே செலவெண்ட்தான். ரெலவெண்ட் இல்லையென்றால் அனுமதிக்கப்பட்டே யிருக்காது. எல்லாமே ரெலவெண்டாக இருப்பதால்தான் அனுமதிக்கப்பட்டு வந்திருக்கின்றன. ஆகவே, இங்கே கொடுக்கப் பட்டிருக்கும் அத்தனை வெட்டுத்தீர்மானங்களும் முன்மொழியத் தக்க உரிமையுடையவைதான். அதை மறுக்கவில்லை. ஆனால், மரபைப் பின்பற்றி வருகிறோம். ஒரு கட்சிக்கு ஒன்று என்ற முறையிலேதானே தவிர, தன்னுடைய வெட்டுத் தீர்மானம் வர வேண்டுமென்று சொல்லும்பொழுதே மற்ற வெட்டுத் தீர்மானம் நிறைவேறிவிட்டது. எனவே இந்த வெட்டுத் தீர்மானம் வரவில்லை முறையிலே சொல்ல வேண்டாம்.

திரு. கே. விநயகம்: 40 பேர் இருக்கிறோம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, முன்பு கடைப்பிடிக்கப்பட்ட முறை, வெட்டுப்பிரேரணைகள் வரும் பொழுது ஒரு மானியக்கோரிக்கைக்கு ஒரு வெட்டுத் தீர்மானம் என்ற மரபின் அடிப்படையிலே ஒன்றுதான் இருந்தது, எதிர்க்

ஒரு கட்சியிலிருந்து ஒரு உறுப்பினருக்கு மேல் வெட்டுத் தீர்மானம் முன்மொழிய அனுமதிக்காதது குறித்து.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1970 ஏப்ரல் 3

கட்சி முழுவதற்கும் சேர்த்து. இப்பொழுதுதான் ஒரு கட்சிக்கு ஒரு வெட்டுப் பிரேரணை என்று வைக்கிறோம். ஆகவே வந்திருக்கும் வெட்டுப்பிரேரணைகள் அவ்வளவும் கவனிக்கப்பட வேண்டியவை தான். ஆனால் விவாதத்திற்கு மூவ் செய்ய வேண்டுமென்பதற்காக ஒவ்வொன்று என்று வைத்திருக்கிறோம். ஒவ்வொரு கட்சிக்கும் மதிப்பளிக்க வேண்டுமென்ற முறையிலே ஒரு கட்சிக்கு ஒன்று என்றுதான் வைத்திருக்கிறது. இந்த முறைதான் நல்லது. இல்லாவிட்டால் எண்ணிக்கை வளர்ந்துகொண்டே போகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான் மரபு.

When all of them are token motions, the practice is that only one is moved in respect of each Demand and other Members who have given notice of cut motions speak on it.

அந்த முறையே தவிர வேறொன்றுமில்லை. திரு. விநாயகம் அவர்களும் கட் மோஷன் கொடுத்திருக்கிறார்கள். திரு. மார்டின் அவர்கள் கொடுக்கும் முறையில், அவர்கள் கட்சியில் போராடிப் பெற்றுக்கொண்டிருக்கலாம். அதற்குப் பேரவைத் தலைவர் குறுக்கே நிற்கவில்லை.

4. 1970-71-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவரவர்களே, போலீஸ்காரர்கள் ஊதியத்தை கூட்டுவது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 12—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 14,49,60,200-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. பி. வேலுசாமி : தலைவரவர்களே, காவலர் பயணப்படி, ஊதிய உயர்வுபற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 12—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 14,49,60,200-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே. போலீஸ்காரர்களுக்கு நாள்படியை அதிகரிக்க வேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 12—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 14,49,60,200-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.